**OS.No.98/2021 P.W.1-சீனிவாசன் 09.03.2026**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

06.02.2008ன் கிரய ஒப்பந்த பத்திரத்தின் படி வழக்கு சொத்தில் உள்ள நூலக கட்டிடத்தை காலி செய்து தராததால் நான் கிரய ஒப்பந்தப்படி இடத்தை வாங்கிக்கொள்ள விரும்பவில்லை, அதனால் முன்பணமாக கொடுத்த பணத்தை திரும்ப கொடுக்க சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 06.02.2008 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தில் எத்தனை நாட்களுக்குள் அவ்வாறு காலி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டேன் என்றால் தேதி குறிப்பிடவில்லை. அவ்வாறு காலி செய்யாததற்கு உடனடியாக அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. நேரில் பலமுறை கேட்டேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நூலகத்தை காலி செய்ய வேண்டுமென்று எந்த வாசகமும் இல்லை என்றால் சரிதான். 06.02.2008 அன்று நான் ரூபாய் 10 லட்சம் கொடுத்த பிறகு 3 வருட காலத்திற்கு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நூலகத்தை காலி செய்ய வேண்டுமென்று நான் நேரில் போய் கேட்ட விவரங்கள் எல்லாம் நூலகம் காலி செய்வதற்கு முன்பு நடைபெற்றவை என்றால் சரிதான். வழக்கு சொத்தில உள்ள நூலகம் 2008ம் வருடம் இறுதியிலேயே காலி செய்து விட்டார்கள் என்றால் இருக்கலாம். நூலகம் காலி செய்த பிறகும், நூலகத்தை காலி செய்து விட்டார்கள் அதனால் உடனடியாக எனக்கு கிரயம் செய்து கொடுங்கள் என்று நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் 26.10.2018 அன்று பிரதிவாதியின் மீது திருப்போரூர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் பிரதிவாதி பணம் பெற்றுக் கொண்டு இடத்தை எழுதிதரவில்லை என்றும், பணத்தை திரும்ப தரவில்லை என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரை பெற்றுக் கொண்டு திருப்போரூர் காவல் நிலையத்தில் CSR copy கொடுத்தார்கள் என்றால் ஞாபகமில்லை. அந்த புகாரின் பேரில் என்னையும், பிரதிவாதியையும் அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். 26.10.218 அன்று நான் கொடுத்த புகாருக்கு திருப்போரூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் கொடுத்த புகார் மனு ரசீது என்முன் காட்டப்படுவதுதான். அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ரசீதில் ரூபாய் 2 லட்சம் பணம் பெற்றுக்கொண்டு, அதே

வீட்டுமனையை ரூபாய் 10 லட்சம் பெற்றுக்கொண்டு விற்பனை செய்யாமல் ஏமாற்றி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)